## ஏப்ரல்- 05 - வியாழன்

**புனித வின்சன்ட் பேரியர்**

**“நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் லூக். 24:38**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்3: 11 – 26

அக்காலத்தில் கால் ஊனமுற்ற அவர் நலமடைந்தபின் பேதுருவையும் யோவானையும் விடாமல் பற்றிக் கொண்டிருக்க, எல்லா மக்களும் திகிலுற்று சாலமோன் மண்டபம் என்னும் இடத்திற்கு ஒரு சேர ஓடிவந்தனர்.பேதுரு இதைக் கண்டு மக்களைப் பார்த்துக் கூறியது ”எருசலேம் மக்களே, நீங்கள் ஏன் இதைப் பார்த்து வியப்படைகிறீர்கள்? நாங்கள் எங்கள் சொந்த வல்லமையாலோ இறைப்பற்றாலோ இவரை நடக்கச் செய்துவிட்டதுபோல் ஏன் எங்களையே உற்றுப் பார்க்கிறீர்கள்?ஆபிரகாம்,ஈசாக்கு, யாக்கோபு, என்னும் நம் மூதாதையரின் கடவுள் தம் ஊழியர். இயேசுவைப் பெருமைப்படுத்தினார். ஆனால் நீங்கள் அவரைப் புறக்கணித்துப் பிலாத்திடம் ஒப்புவித்துவிட்டீர்கள். அவன் அவருக்கு விடுதலைத் தீர்ப்பு அளிக்க முயன்றபோதும் நீங்கள் அவரை மறுதலித்தீர்கள்.நீங்கள் தூய்மையும் நேர்மையுமானவரை மறுதலித்துக் கொலையாளியை விடுதலை செய்யுமாறு வேண்டிக்கொண்டீர்கள்.வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்.இதோ உங்கள் கண்முன் நிற்கிற இவர் உங்களுக்குத் தெரிந்தவர். இயேசுவின் பெயரே இவருக்கு வலுவூட்டியது. அவர் பெயர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால்தான் இது நடந்தது. இந்த நம்பிக்கையே உங்கள் அனைவர் முன்பாகவும் இவருக்கு முழுமையான உடல் நலனைக் கொடுத்துள்ளது.அன்பர்களே, நீங்களும் உங்கள் தலைவர்களும் அறியாமையினாலேயே இப்படிச் செய்துவிட்டீர்கள் என எனக்குத்தெரியும்.ஆனால் கடவுள், தம் மெசியா துன்புறவேண்டும் என்று இறைவாக்கினர் அனைவர் வாயிலாகவும் முன்னறிவித்ததை இவ்வாறு நிறைவேற்றினார்.எனவே உங்கள் பாவங்கள் போக்கப்படும்பொருட்டு மனம்மாறி அவரிடம் திரும்புங்கள். அப்பொழுது ஆண்டவர் புத்துயிர் அளிக்கும் காலத்தை அருளி உங்களுக்காக ஏற்படுத்திய மெசியாவாகிய இயேசுவை அனுப்புவார்.விண்ணேற்றமடைந்த இயேசு யாவும் சீர்படுத்தப்படும் காலம் வரை விண்ணுலகில் இருக்கவேண்டும். பழங்காலத் தூய இறைவாக்கினர் வாயிலாகக் கடவுள் இந்தக் காலத்தைக்குறித்து கூறியிருந்தார்.மோசேயும், ”உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்கள் சகோதரரிடமிருந்து என்னைப்போல் ஓர் இறைவாக்கினரைத் தோன்றச்செய்வார். அவர் உங்களுக்குக் கூறும் எல்லாவற்றிற்கும் நீங்கள் செவிசாயுங்கள்.அந்த இறைவாக்கினருக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படியாத எவரும் மக்களினின்று அடியோடு அழிக்கப்படுவர்” என்று கூறியுள்ளார். சாமுவேல் தொடங்கி இறைவாக்குரைத்த அனைவரும் இந்தக் காலத்தைப்பற்றி அறிவித்து வந்தனர்.அந்த இறைவாக்கினர் உரைத்தவற்றை உரிமையாக்கிக்கொள்பவர்கள் நீங்கள். கடவுள் ஆபிரகாமிடம், ”உன் மரபினர் வழியாக மண்ணின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்” என்று கூறி உடன்படிக்கை செய்தார். கடவுள் உங்கள் மூதாதையரோடு செய்த அந்த உடன படிக்கையையும் உரிமையாக்கிக் கொள்பவர்கள் நீங்களே. ஆகையால், நீங்கள் அனைவரும் உங்கள் தீயசெயல்களைவிட்டு விலகி ஆசி பெற்றுக்கொள்வதற்காகவே, கடவுள் தம் ஊழியரைத் தோன்றச் செய்து முதன்முதல் உங்களிடம் அனுப்பினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும்
எவ்வளவு மேன்மையாய் விளங்குகிறது.

### நற்செய்தி : லூக்கா 24 : 35 – 48

அக்காலத்தில் சீடர்கள் அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்துகொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.சீடர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது இயேசு அவர்கள் நடுவில் நின்று, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று அவர்களை வாழ்த்தினார்.அவர்கள் திகிலுற்று, அச்சம் நிறைந்தவர்களாய், ஓர் ஆவியைக் காண்பதாய் நினைத்தார்கள். அதற்கு அவர், ”நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்ளுகிறீர்கள்?என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், நானே தான். என்னைத் தொட்டுப் பாருங்கள் எனக்கு எலும்பும் சதையும் இருப்பதைக் காண்கிறீர்களே. இவை ஆவிக்குக் கிடையாதே” என்று அவர்களிடம் கூறினார். இப்படிச் சொல்லித் தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். அவர்களோ மகிழ்ச்சி மேலிட்டு, நம்பமுடியாதவர்களாய், வியப்புக்குள்ளாகி இருந்தார்கள். அப்போது அவர் அவர்களிடம், ”உண்பதற்கு இங்கே உங்களிடம் ஏதேனும் உண்டா?” என்று கேட்டார்.அவர்கள் வேக வைத்த மீன்துண்டு ஒன்றை அவரிடம் கொடுத்தார்கள்.அதை அவர் எடுத்து அவர்கள்முன் அமர்ந்து உண்டார்.பின்பு அவர் அவர்களைப் பார்த்து, ”மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர் நூல்களிலும் திருப்பாடல்களிலும் என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேற வேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே உங்களுக்குச் சொல்லியிருந்தேனே” என்றார். அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார்.அவர் அவர்களிடம், ”மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும்,“பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்“ என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்படவேண்டும் என்றும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்“ என்றார்.

**தியானம்:** இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்ளுகிறீர்கள்?” படைப்பின் தொடக்கத்தலிருந்தே மனிதகுலம் கடவுளுக்கெதிராகக் கட்டிக் கொண்ட அனைத்துப் பாவங்களுக்காகவும், உலக முடிவு வரை மனிதர் கடவுளுக்கெதிராக செய்யக்கூடிய அனைத்துப் பாவங்களுக்குப் பரிகாரத்தின் முன்னடையாளமாகவும் இறைமகன் மனுவுருவெடுத்து தம்மைத் தாமே தமது தந்தைக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். தந்தையாகிய இறைவனும், தமது சித்தப்படி அனைத்தையும் நிறைவேற்றிய தமது ஒரேமகனை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்தார். இது மாந்தர் அவைரும் தமது பாவங்களுக்கு மரித்து அதாவது தத்தம் பாவச் செயல்களை விட்டொழித்து கடவுளிடம் திரும்பி வரும்போது அவர்கள் அனைவரையும் புத்துயிர் பெறச் செய்கின்றார் என்பதற்கு முன்னடையாளமாகும். கடவுள் இந்த மீட்புத்திட்டத்தை வேறுவழியில் கையாண்டிருக்க முடியாதா? ஏன் பாடுகள்? ஏன் மரணம்? அதன்பின் உயிர்ப்பு? என்ற கேள்விகள் நம் மனதிலே எழுவது இயல்பே. கடவுள் தமது நிலையைப் பற்றிக்கொண்டிருக்கக் வேண்டிய தொன்றாகக் கருதாமல், மனிதருக்கு ஒப்பாகி செய்து முடித்த இந்த மீட்புத் திட்டத்தின் வாயிலாகத்தான் கடவுள் மனிதர் மேல் கொண்ட அன்பு தெட்டத் தெளிவாகப் புலனாகின்றது. ஆணியால் துளைக்கப்பட்ட கைகளும், கால்களும், மரியன்னையின் மடியில் கிடத்தப்பட்ட உயிரற்ற அதே உடலும் இன்று அவரது சீடர்களுக்குத் தரிசனம் கொடுக்கின்றன. “உண்பதற்கு இங்கே உங்களிடம் ஏதேனும் உண்டா?” என்ற இயேசுவின் கேள்வி அதை உறுதிப்படுத்த நிற்கின்றது. இந்தஉயிர்ப்பின் உண்மையை நாம் விசுவசிக்க வேண்டும் என்றே இன்றைய முதல் வாசமும் திருத்தூதர்கள் வாயிலாக நமக்கு அழைப்பு விடுக்கின்றது .உயிர்த்தகிறிஸ்து வழங்கும் “உங்களுக்கு அமைதிஉரித்தாகுக!” என்ற நற்செய்தியை அவரில் நம்பிக்கை கொள்வதன் வழியாக நமக்கும் சொந்தமாக்கிக் கொள்வோமாக!